**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**அசல் வழக்கு எண் – 15/2016**

**பிரதிவாதி தரப்பு சாட்சி–1 காளியம்மாள் – திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கி**ளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 29.10.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**வாதி தரப்பில் குறுக்குவிசாரணை:**

1) நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் கைரேகை வைத்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி விபரங்கள் நான் சொல்லி தயார் செய்ததா என்றால் ஆமாம். அதில் உள்ள விபரங்களை படித்துக் காட்டினார்களா என்றால் காட்டினார்கள். வாதி எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால், எனது வீட்டை எழுதி வாங்கியதாக சொல்லி வழக்கு போட்டுள்ளார். நான் அதில் கையெழுத்து போடவில்லை. எந்த வருடம் வீட்டை எழுதி வாங்கினார் என்றால் ஞாபகமில்லை. தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்து எவ்வளவு விஸ்தீரணம் என்றால் சுமார் 4 செண்ட் இருக்கும். தாவா சொத்து வாதியின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. நான்தான் அனுபவம் செய்து வருகிறேன். அதில் வீடு உள்ளதா என்றால் ஓட்டுவீடு உள்ளது. அதில் மின்இணைப்பும் பெற்றுள்ளேன்.

2) 10.12.1993 ல் வாதி எனது தகப்பனார் பெரியசாமி பண்டாரம், எனது சித்தப்பா முத்துசாமி பண்டாரம், எனது தங்கை தங்கம்மாள், காளியம்மாள், முத்துச்சாமியின் மகள் மருதாம்பாள் ஆகியோரிடம் இருந்து வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தின் மூலம் தாவா சொத்தை கிரையம் பெற்றுள்ளனர் என்றால், நாங்கள் சொத்தை விற்கவில்லை. மேற்படி கிரைய ஆவணமானது கடவூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் கிரையம் செய்யப்பட்ட சொத்து சர்வே எண் 421/3 என்றால், சர்வே எண் எனக்கு ஞாபகமில்லை. 21.03.1983 ல் வா.சா.ஆ.4 கிரைய ஆவணத்தின் மூலம் சுந்தரநாதன் என்பவருக்கு நானும், எனது தகப்பனார், சகோதரியும் சேர்ந்து

கிரையம்செய்து கொடுத்தோம் என்றால் கிரையம் செய்யவில்லை, ஈட்டு பத்திரம் எழுதிக் கொடுத்தோம். ரூ.5000/–க்கு ஈடு வைத்தோம். ரூ.1,50,000/– திருப்பிக் கொடுத்தோம்.

3) மேற்படி கிரைய ஆவணத்தில் கண்டுள்ள சர்வே எண் 421/3 என்றால் சரிதான். 1983ம் வருட பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள நான்கெல்லை விபரங்கள் சரிதானா என்றால் சரிதான். 1983ம் வருட பத்திரத்தில் மங்களூர் ஓடு போட்ட, மண் சுவராலும், அஸ்திவாரம் இல்லாமல் கட்டப்பட்ட ஓட்டுவில்லை வீடு என கண்டுள்ளது என்றால் சரிதான், அதை தற்போதுவரை நாங்கள்தான் அனுபவம் செய்து வருகிறோம். அதை ஈடுதான் வைத்தோம். 1983ம் ஆண்டு ஆவணத்தில் கண்ட சொத்து மற்றும் 1993ம் வருட ஆவணத்தில் கண்ட சொத்துக்களை தவிர எனது தகப்பனாருக்கோ அல்லது எனக்கோ, எனது சகோதரிக்கோ வேறு சொத்துக்கள் உள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்துக்கான பத்திரம், பட்டா ஆகியவை வாதி பெயரில்தான் தற்போதுவரை உள்ளது என்றால் சரியல்ல, நாங்கள் தான் பட்டா வாங்கியிருக்கிறோம். என் பெயரில் உள்ள பட்டாவை தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் செய்திருக்கிறேன். நான் சொல்வது தவறு என்றும், இன்றைய தேதியில் வாதி பெயரில்தான் பட்டா உள்ளது என்றால் சரியல்ல.

4) வாதி தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் பற்றி தெரியுமா என்றால் தெரியும். வா.சா.ஆ.12, 13 ஆவணங்களாக தாவா சொத்துக்களுக்கான பட்டா தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால், நானும் எனது பெயரில் உள்ள பட்டாவை தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள பி.சா.ஆ.6 பட்டாவானது தற்போதைய காலத்திற்கு உரியது அல்ல என்றால் சரியல்ல. கணினி பட்டா நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கணினி பட்டாவானது வாதி பெயரில் உள்ளது என்றும், அதை மறைக்கத்தான் நான் கணினி பட்டாவை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, என் பெயரில்தான் உள்ளது. என் பெயரில்

கணினி பட்டாவை பார்த்தேனா என்றால் பார்த்தேன், எவ்வாறு பார்த்தேன் என்றால் 3ம் பிரதிவாதி சொர்ணம் வாங்கி வைத்திருக்கிறார். என் தங்கை தங்கம்மாளும், சொர்ணமும் இறந்துவிட்டனர். வாதி பெயரில் உள்ள கிரைய ஆவணம் மற்றும் சுந்தரநாதனிடம் இருந்து வாதி கிரையம் பெற்றது எப்போது எனக்கு தெரியவந்தது என்றால், சுந்தரநாதன் இறப்பதற்கு முன்பே தெரியும். சுந்தரநாதன் எப்போது இறந்தார் என்றால் தெரியவில்லை.

5) சுந்தரநாதன் பெயரிலோ, அவரிடம் இருந்து கிரையம் பெற்ற வாதிக்கோ எதிராக நான் ஏதாவது சட்ட நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். அதை இவ்வழக்கில் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் செய்திருக்கிறேன். நான் சொல்வது போல புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றும், அவ்வாறு புகார் கொடுத்திருந்தால் அதனை தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. நான் புகார் கொடுத்தேன், அவர்கள் விசாரணை செய்துவிட்டு நீதிமன்றத்தில் பாத்துக்கொள்ளுமாறு சொல்லிவிட்டனர். எப்போது புகார் கொடுத்தேன் என்றால் சுமார் 10 வருடத்திற்கு முன்பு கொடுத்தேன். 10 வருடமாக வாதிக்கு எதிராக நான் எந்த சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கிலும் எதிரிடை கோரிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

6) எனது பதிலுரையில் சொல்லப்பட்டுள்ள விபரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. வாதி கிரையம் பெற்ற ஆவணத்தை பொறுத்தோ, சுந்தரநாதனிடம் இருந்து கிரையம் வாங்கிய ஆவணத்தை பொறுத்தோ, தற்போதுவரை செல்லாது என எந்த ஒரு சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். வாதி பெயரில் தாவா சொத்துக்களுக்கு பட்டா மாறியது குறித்து வருவாய்துறையில் மனு கொடுத்தேனா என்றால் இல்லை. எனது நிலத்திற்கு நான்கெல்லை தெரியுமா என்றால், ரோட்டிற்கு மேற்கு, சண்முகநாதன் கடைக்கு வடக்கு, மூக்கையன் கடைக்கு தெற்கு, நடுவில் 5 அடி நடைபாதை வீட்டிற்கு செல்வதற்கு உள்ளது. வீடு என்பது ஓட்டுவில்லை

வீடா என்றால் ஆமாம், 2 வீடுகள் உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் தாவா சொத்திற்கு சம்பந்தப்படாதவை என்றால் சரியல்ல. பி.சா.ஆ.1 பதிவு செய்யப்படாத கிரைய ஆவணம் என்றால் சரிதான், அது சுந்தரநாதனுக்கு நாங்கள் எழுதிக் கொடுத்தது.

7) பி.சா.ஆ.1 ஆவணத்தில் சொத்துவிபரம் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால், ஓட்டுவீல்லை வீட்டிற்காக எழுதிக் கொடுத்தது. பி.சா.ஆ.1 சொத்துவிபரம் குறிப்பிடவில்லை என்றும், அது பதிவு செய்யப்படாதது என்பதாலும், மேற்படி ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், அதன் அடிப்படையில் எனக்கு எந்த உரிமையும் ஏற்படாது என்றால் சரியல்ல. பி.சா.ஆ.2 ஆவணத்தில் அடித்தல், திருத்தல் உள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.2 ஆவணத்தை பொறுத்து உரிய நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் இதே நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். எப்போது செய்தேன் என்றால் 15 வருடத்திற்கு முன்பு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது. மேற்படி வழக்கு சம்பந்தமான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன்.

8) மேற்படி வழக்கு ஆவணங்களை பார்த்தால் பி.சா.ஆ.2 ன் உண்மைத்தன்மை தெரியும் என்றால் சரிதான். நான் எனது சாட்சியத்தில் மற்ற பிரதிவாதிகளுக்காகவும் அளிக்கிறேனா என்றால் ஆமாம். எனது தங்கை தங்கம்மாள் எப்போது இறந்தார் என்றால் சுமார் 4, 5 வருடங்கள் இருக்கும், 3 ம் பிரதிவாதி சொர்ணம் இறந்து எத்தனை வருடம் இருக்கும் என்றால் 4, 5 வருடங்கள் இருக்கும். தங்கம்மாளுக்கு எத்தனை குழந்தைகள் என்றால், அவருக்கு குழந்தைகள் இல்லை. அவரது கணவர் எங்கே இருக்கிறார் என்றால் அவர் வேறு திருமணம் செய்து கொண்டு, வேறு ஊரில் இருக்கிறார். தங்கம்மாள் தனது கணவரிடம் இருந்து பிரிந்து எவ்வளவு வருடங்கள் இருக்கும் என்றால் சுமார் 35 வருடத்திற்கு மேல் இருக்கும். திருமணம் ஆன உடனே பிரிந்துவிட்டனர்.

9) சொர்ணத்திற்கு வாரிசுகள் உள்ளனரா என்றால் 3 மகன்கள் உள்ளனர். சொர்ணம் எனது சின்னம்மா மகன். சொர்ணத்தின் மகன்கள் பெயர் தெரியுமா என்றால், ஒரு மகன் பெயர் காமராஜ், மற்ற மகன்கள் பெயர் தெரியவில்லை. சொர்ணம், தங்கம்மாள் இறந்த விபரத்தை எனது முதல் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. மேற்படி நபர்கள் இறப்பு விபரத்தை சொன்னால் எனக்கு எதிராக முடிந்துவிடும் என்பதால் அதை சொல்லவில்லை என்றால் சரியல்ல.

(வேண்டுகோளுக்குணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**